Fact Sheet 3 - Tamil

உண்மைத் தாள் 3

# பாலின சமத்துவம் மற்றும் மரியாதையை ஊக்குவித்தல்

**அனைவருக்குமான நியாயம், வாய்ப்பு, மற்றும் விருப்பத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் ஆஸ்திரேலிய சமூகம் நிறுவப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்தை நாங்கள் மதிக்கிறோம், அத்துடன் வன்முறையிலிருந்து விடுபட்டு வாழ அனைவருக்கும் உரிமை உண்டு. பாலின சமத்துவத்தை அடைவது, பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்கக்கூடும். சமீபத்திய தசாப்தங்களில், பாலின சமத்துவத்தை அடைவதில் ஆஸ்திரேலியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.**

**ஆஸ்திரேலியாவில் பாலின சமத்துவம்**

வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறைகளை (DFSV) தடுக்க உதவும் வகையில், தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்கள், பணியிடங்கள், வணிகங்கள், மற்றும் மத குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு ஆஸ்திரேலிய மற்றும் தென் ஆஸ்திரேலிய அரசாங்கங்கள் மரியாதை மற்றும் சமத்துவ கலாச்சாரங்களை உருவாக்குகின்றன.

பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியதில் தென் ஆஸ்திரேலியா ஆஸ்திரேலியாவிலேயே முதல் இடத்தையும், உலகில் நான்காவது இடத்தையும் பிடித்தது. அத்துடன், பெண்கள் பாராளுமன்றத்திற்காக நிற்கவும், தலைவர்களாகவும் முடிவெடுப்பவர்களாகவும் நமது சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்கவும் வாய்ப்பளித்த உலகின் முதல் இடமாகவும் திகழ்கிறது.

ஆஸ்திரேலிய மற்றும் தெற்கு ஆஸ்திரேலிய சட்டங்கள், வாய்ப்பின் சமத்துவத்தை ஊக்குவிக்கின்றன, பாகுபாட்டைத் தடுக்கின்றன, தவறாக மதிப்பிடும் கண்ணோட்டத்தை ஊக்குவிப்பதில்லை, மேலும் நமது பொது, பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையில் மக்கள் பங்கேற்க உதவுகின்றன. பாலியல் பாகுபாடு மற்றும் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பெண்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பையும் அவை வழங்கியுள்ளன.

இந்தச் சட்டங்களால், பெண்களுக்கு பின்வரும் உரிமைகள் உள்ளன:

- தங்கள் சொந்த வருமானத்தை ஈட்டி, அதைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் நிதி ரீதியாக சுயாதீனமாக இருத்தல்;
- எந்தப் பணியிலும் வேலை புரிதல்;
- பெற்றோர் விடுப்பு ஊதியம் போன்ற உரிமைகள் மூலம், பராமரிப்புக் கடமைகளுடன் வேலையையும் சமநிலையாக சமாளித்தல்; மற்றும்
- பாலியல் பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து விடுபட்டு வாழ்தல்.

ஆஸ்திரேலியாவில் அனைவருக்கும் சமமாகப் பங்களிக்கவும் பங்கேற்கவும் உரிமை உண்டு. பெண்கள், தொழில் ரீதியாக அனைத்துப் பகுதிகளிலும் பங்கேற்கிறார்கள். அத்துடன், மற்றைய பெண்கள் மற்றும் சிறுமிகளையும் பொருளாதார வலுவூட்டலை அடையத் தூண்டுகிறார்கள்.

தலைவர்களாகவும் முடிவெடுப்பவர்களாகவும் தமது திறனை அடைய பெண்களுக்கு உதவுவதும் பாலின சமத்துவத்தை அடைவதற்கு மிக முக்கியம். தென் ஆஸ்திரேலிய அரசாங்கம் எடுத்துக்காட்டாக, அதன் வாரியங்கள் மற்றும் குழுக்களில் 50 சதவீத பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பேணிவருகிறது.

ஆஸ்திரேலியா முழுவதும் பெண்களின் விளையாட்டு ரீதியான சாதனைகள் கொண்டாடப்படுகின்றன. மேலும், பெண்களின் விளையாட்டின் புகழ் தொடர்ந்து அதிகரித்து வருகிறது, குறிப்பாக உயரடுக்கு AFLW (பெண் விளையாட்டு வீரர்களுக்கான ஆஸ்திரேலிய விதிமுறைக் கால்பந்து) அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து.

இந்த உரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆஸ்திரேலியாவில் வாழும் அனைவருக்கும் பொருந்தும்.

**பாலின சமத்துவமின்மை மற்றும் வீட்டு, குடும்ப, மற்றும் பாலியல் வன்முறை (DFSV)**

பல பாகுபாடான மற்றும் தீங்கு விளைவிக்கும் நம்பிக்கைகள், DFSV-க்கு பங்களிப்பதாக ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன:

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவமின்மை;
- ஆண்கள் மற்றும் பெண்களின் பணிகள் பற்றிய எதிர்பார்ப்புகள் மற்றும் நிலையான சிந்தனைகள்; மற்றும்
- பெண்கள் மீதான ஆண்களின் வன்முறையை மன்னிக்கும் சமூக அணுகுமுறைகள்.

பெண்கள் தமது உறவுகளிலும் சமூகத்திலும் குறைவான கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடாத்தப்படுவதற்கு இவ்வாறான நம்பிக்கைகள் வழிவகுக்கும்.

இந்த நம்பிக்கைகளுக்கு சவால் விடுவதும் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடத்தைகளை மாற்றுவதும், பாலின சமத்துவத்தை அடைவதற்கும் DFSV-யைக் குறைப்பதற்கும் முக்கியமானவையாகும்.

**என்னால் என்ன செய்ய முடியும்?**

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஆதரிக்கும் அணுகுமுறைகள், நம்பிக்கைகள், மற்றும் நடத்தைகளாவன கற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால், அவை சவால் செய்யப்பட வேண்டும், அத்துடன் அவை மாற்றப்படக்கூடியவை.

தனிநபர்களும் சமூகங்களும் தீங்கு விளைவிக்கும் நம்பிக்கைகளுக்கு சவால் விடுகின்றனர். அத்துடன், பின்வருவனவற்றின் மூலம், பொருத்தமற்ற மற்றும் தவறான நடத்தைகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்:

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான மரியாதையை ஊக்குவிக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல்;
- சமத்துவத்தையும் மரியாதையையும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை எடுத்தல்;
- DFSV பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்;
- DFSV பற்றிக் கலந்துரையாடல்; மற்றும்
- DFSV-யைத் தடுப்பதற்கான தங்கள் வேலையை வலுப்படுத்த, கூட்டாண்மைகளை உருவாக்குதல் மற்றும் மாற்றத்திற்காக வாதிடுதல்.

நம் ஒவ்வொருவருக்கும் இதில் ஒரு பங்கு உண்டு. ஒன்றாக நாம் DFSV-ஐத் தடுக்க உதவலாம்.

இது, DFSV-ஐக் குறித்துள்ள 4 உண்மைத் தாள்களில் ஒன்றாகும். பாலின சமத்துவம் மற்றும் மரியாதையை மேம்படுத்துவது பற்றி மேலும் அறிய, உண்மைத் தாள் 4-ஐப் பார்க்கவும். DFSV-ஐ இனங்காணுதல் மற்றும் அதற்குப் பதிலளித்தல் பற்றிய கூடுதல் தகவல்கள், உண்மைத் தாள்கள் 1 மற்றும் 2-ல் கிடைக்கின்றன.